வேண்டுகோளை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். ஒப்புக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால், நாங்கள் எடுத்துச் சொல்லும் வாதத்தில் நியாயம் இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, இதில் அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10-10.)

4. கவன ஈர்ப்புகள்.

(அ) காட்பாடி தொகுதியில் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பன், சோ. அழகர்சாமி, கே. ஆர். சுந்தரம், மு. அப்பாதுரை, ஜி. மூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, ''காட்பாடி தொகுதி, தண்டலம் கிருஷ்ணாவரம் கிராமத்தில் பெண்களிடத்தில் தகாத முறையில் நடந்து கொண்ட வாலிபர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1984 மார்ச் 28] [டாக்டர் இரா நெடுஞ்செழியன்]

அறிக்கை.

8-3-1984-ஆம் தேதி காலை சுமார் 11-00 மணிக்கு விருதம்பட்டு காலனி, அம்பேத்கார் தெருவைச் சேர்ந்த காளி என்பவர் மகன்கள் சந்திரன், சுப்பிரமணி இருவரும் பாலாற்றங்கரையில் சூளை போட்டுக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அவ்வமயம் சேண்பாக்கம் காலனியைச் சேர்ந்த மோகன், லால் இருவரும் பாலார் இரயில்வே பாலத்தில் பெயிண்ட் அடிக்கும் வேலை செய்து கொண்டிருந்த பொழுது அருகில் தன் வீட்டின் பின்னால் குளித்துக் கொண்டு இருந்த நந்தகோபால் மனைவி பாப்பம்மாள் (35) (ஒட்டர் ஜாதி) என்ற பெண்ணைக் கிண்டல் செய்துள்ளனர். சந்திரன், தன் தம்பி சுப்பிரமணியுடன் மேற்படி மோகன், லால் இருவரையும் ஏன் குளிக்கும் பெண்ணை கேலி செய்கின்றீர்கள் என்று கண்டித்துள்ளார். உங்களை பார்த்து கொள்கிறோம் என்று கூறிவிட்டு மோகன், லால் இருவரும் சுமார் 1/2 கி.மீ. உள்ள தன் காலனிக்குச் சென்று சுமார் 8 நபர்களுடன் வந்து, சந்திரன், சுப்பிரமணி ஆகிய இருவரையும் தடி, இரும்பு கம்பி ஆகியவற்றால் தாக்கி உள்ளனர். அருகில் தன் நிலத்தில் இருந்த கருணாகரன், காட்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். ஏ. பூங்காவனம் அவர்களின் மகன் அங்கே ஓடிப் போய் இரு தரப்பினரையும் சமாதானப்படுத்த முயன்றபோது மோகன், லால் இருவரும் கருணாகரனையும் இரும்புக் கம்பியால் தலை மீதும், இடது கால் மீதும் தாக்கிவிட்டு ஓடி விட்டனர். காயம் அடைந்த மூவரும் வேலூர் அரசு தலைமை மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சைப் பெற்று உள் நோயாளிகளாக இருந்து வருகின்றனர்.

2. சந்திரன் கொடுத்த புகாரின் பேரில் 8—3—1984ந் தேதி காட்பாடி குற்ற எண் 123/84 பிரிவு 147, 148, 326, இ.த.ச. படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்ய முழு முயற்சி மேற்கொண்டதில் பயனற்று போயிற்று. சம்பவத்திற்கு பின் அனைத்து எதிரிகளும் தலைமறைவாகி விட்டனர்.

3. சட்டமன்ற உறுப்பினர் மகன் கருணாகரன் என்பவர் திட்டமிட்டோ அல்லது உள் நோக்குடனோ தாக்கப்பட்டிருக்கவில்லை என விசாரணையில் தெரிய வருகிறது. விருதம்பட்டு சேம்பாக்கம் ஆகிய இரு காலனிகளிடையே முன் விரோதம் இதுவரை ஏதும் இல்லை. எதிரிகள் அனைவரும் தொழிலாளர்கள், போக்கிரிகள் அல்ல.

4. மேற்கொண்டு எந்தவித அசம்பாவிதமும் நடவாமல் இருக்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிரிகளை கைது செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 8 ஆம் தேதி அன்று தண்டலம் கிருஷ்ணாவரம் என்ற என்னுடைய தொகுதியிலுள்ள பகுதியில் காலை 11 மணி அளவுக்கு குளித்துக் கொண்டிருந்த பெண்ணிடம் லால், மோகன் என்ற இரு வாலிபர்கள் தகாத முறையில் நடந்ததைக் கண்டித்த சந்திரன், சுப்பிரமணியம் என்பவர்களை இவர்களும் மற்றவர்களும் தாக்கியதாக விவர அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கின்றது. ஆனால் நடந்த உண்மை என்னவென்றால், அதாவது உண்மையான நிலைமைக்கும் இந்த விவர அறிக்கைக்கும் சம்பந்தமே இல்லை. தாக்கப்பட்ட வாலிபர்கள் நல்லவர்கள், அவர்கள் தொழிலாளர்கள், அப்படிப்பட்டவர்கள் மீது சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் இல்லை என்ற மாதிரி அறிக்கை தந்திருக்கிறார்கள். லால் என்று சொல்லப்படுகின்ற நபர் ஒரு சமூக விரோதி, பிக்பாக்கெட் அடிப்பவர். அவருடைய உடல் முழுவதும் கத்திக்குத்துக் காயம் இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நபர் ஊரிலேயே இருந்து இருக்கிறார். ஆனால் காவல் துறை அதிகாரிகள் அங்கே உள்ள யாரையும் கைது செய்யவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அங்கே காண்ட்ராக்டரிடம் வேலை செய்து கொண்டிருந்த உப காண்ட்ராக்டர் துரை என்பவரைக் கைது செய்து சிறைக்குள்ளே வைத்திருக்கிறார்கள். அவரை ஜாமினில் விடக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் விவர அறிக்கையில் அது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சுருக்கமாக இருக்கவேண்டும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, இரண்டு நபர்களும் ஊரிலேயே இருந்து முன் ஜாமீன் கோரி கோர்ட்டிலே அப்பீல் செய்திருக்கிறார்கள். அதுகுறித்து இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒத்திவைக்கப்பட்டு இப்போது விசாரணையில் இருக்கின்றது. அந்தக் காவல் நிலையத்திலே இருக்கக்கூடிய அண்ணாமலை இந்த இருவரும் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆதரவாக அனுசரணையாக ஒத்துப் போவார்கள் என்ற காரணத்தில்தான் அந்த கருத்தில்தான் இப்படிப்பட்ட நிலைமையை மேற்கொண்டிருக்கிறார். என்னுடைய மகன் கூட தாக்கப்பட்டிருக்கிறான். அதைப்பற்றிப் பெரிதாக நான் சொல்லவில்லை. ஆனால் குறிப்பாக யாருக்குமே அந்தப் பகுதியில் பாதுகாப்பு இல்லை என்ற அவல நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே அங்கே காவல் நிலையத்திலே உள்ளவர்கள் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டுகோள்தான் வைத்திருக்கிறார். எனவே பதில் தேவையில்லை.

*திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டருப்பதன்படி சந்திரன், சுப்பிரமணியன், கருணாகரன் ஆகியோர் 8—3—1984 அன்று தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக இந்தச் சம்பவம் நடந்து இன்றையதினம் வரையில் 20 தினங்கள் ஆகின்றன. இவ்வளவு நாட்கள் ஆகியும் அந்த நபர்களைக் கைது செய்யாததன் காரணம் என்ன? அவர்களைக் கைது செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறபடி இந்தத் தகாத செயல்களில் ஈடுபட்ட மோகன், லால் ஆகிய இருவரும் அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களும் உள்ளபடியே கைது செய்யப்பட்ட வேண்டியவர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இந்த அறிக்கையிலே சொல்லப்படுவது அவர்கள் தலைமறைவாகியிருக்கிறார்கள், அவர்களைக் கைது செய்ய முடியவில்லையென்பது. மாண்புமிகு பூங்காவனம் அவர்கள் கூறும்போது அவர்கள் அங்கேயேதான் இருக்கிறார்கள். ஆனால் கைது செய்யப்படவில்லையென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் கருத்தினுடைய அடிப்படையிலே கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்கள் — தலைமறைவாகி இருக்கிறார்கள் என்ற அளவுக்குத்தான் எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது —அங்கேயே இருப்பார்களானால் தீவிரமாக—இப்படிப்பட்ட விஷயங்களிலே அலட்ச்சியமாக இருந்து விடமுடியாது: அவர்கள் கைது செய்யப்படத்தான் வேண்டும் — தக்கபடி அவர்கள் தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளில் நல்லவேளையாக இரண்டு சேரிகளுக்கிடையே ஒரு பெரும் கலவரம் வந்து விடாத அளவுக்கு ஒரு சூழ்நிலை இருப்பது மகிழ்சிக்குரிய ஒன்று. ஆகவே, மேலும் தவறான சூழ்நிலை ஏற்படாத அளவுக்கு உரியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே மேற்கொண்டு தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைத்திருக்கின்ற அறிக்கையிலே ஒரு சாதாரண ஏழைப் பெண் குளித்துக் கொண்டிருக்கும்போது தகாத முறையிலே நடந்த இருவரை அங்கே இருந்தவர்களும் அந்தப் பெண்ணுக்குச் சொந்தக்காரர்களோ, அல்லது வேறு யாரோ—அதே நேரத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்களுடைய மகனும் அங்கே இருந்திருக்கிறார்—அவர்கள் அந்த இருவரை ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அந்த இருவரும் சுமார் 1/2 கி.மீ. தூரத்திற்குச் சென்று, 8 பேர்களை அழைத்து வந்து அவர்களைக் கொண்டு, இவர்களை தடி, கம்பிகளால் அடித்துக் காயப்படுத்தியுள்ளார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மகனும் காயம் அடைந்திருக்கிறார். இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருப்பது, ''குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்ய முழு முயற்சி மேற்கொண்டதில் பயனற்றுப் போயிற்று'', என்பது. முழு முயற்சி மேற்கொண்டும் பயனற்றுப் போயிற்று என்றால், ஒன்றும் செய்ய முடியவில்லையென்று இவர்களே சொல்கிறார்கள். அந்த இருவரும் அடியாட்களை அழைத்துக் கொண்டு வந்து, கம்பிகளைக் கொண்டு வந்து, கடப்பாறையைக் கொண்டு வந்து, 1/2 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து 8 பேர்களைக் கொண்டு வந்து, அடித்தார்கள். அந்தப் பகுதியில் உள்ள காவலர்கள் முழு முயற்சி பண்ணியும் பயனற்றுப் போயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் என்ன செய்ய முடியும்? இவ்வளவு இலட்சணத்திலே, அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கம்பிகளாலே அடித்திருக்கிறார்கள்; உதவிக்கு வந்த சொந்தக்காரர்களை அடித்திருக்கிறார்கள். அடிபட்டவர்கள் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். போலீஸ் என்ன சொல்கிறது என்றால், நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் முழு முயற்சி பண்ணி பயனற்றுப் போயிற்று என்று சொல்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? அதை இங்கே வந்து படிப்பதில் என்ன அர்த்தம்? அப்படியென்றால் ஏழை, எளியவர்களுக்கு என்னதான் பாதுகாப்பு? அமைச்சர் அவர்கள் சரியான பதிலை அளிப்பாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் இந்த திரு. சந்திரன், சுப்பிரமணியம் ஆகிய இருவரும், கேலி செய்து தகாத முறையில் நடந்து கொண்ட மோகன், லால் ஆகிய இருவரையும் கண்டித்தது உள்ளபடியே பாராட்டுக்குரியதுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்களுடைய மகனும் ஒரு நல்ல காரியம் செய்யத்தான் போய், சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவரையும் சேர்த்து அடித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பெண்ணிடத்திலே தகாத முறையிலே ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல், தங்களுடைய சேரிக்குப் போய் ஆட்களை அழைத்துக் கொண்டு வந்து, வன்முறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்

னார்கள். விளக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறபடி, குற்ற எண் 123/84, பிரிவு 147, 148, 326 இ.த.ச. வின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர் சாமி அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று குற்றம் சாட்டப் பட்டவர்களைக் கைது செய்ய முழு முயற்சியும் மேற்கொண்டது பயனற்றுப் போய்விட்டது என்பது உள்ளபடியே அந்தப் பகுதி யிலே உள்ள போலீசாருடைய திறமைக் குறைவைத்தான் காட்டு கிறது. உள்ளபடியே அது மாற்றப்பட வேண்டும். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். உள்ளபடியே வேறு பெரிய, பெரிய வழக்குகளிலே எல்லாம் கண்டு பிடிக்கிற தமிழக காவல் துறை யினர் முழு முயற்சி செய்து இதிலே கண்டு பிடிக்க முடியாமல் திணறுகிறார்கள் என்பதை நான் ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே தீவிரமான நடவடிக்கையை எடுத்து, குற்றவாளிகளைக் கண்டு பிடித்து, தக்க தண்டனை கொடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த இரண்டு நபர்களும் சமூக விரோதிகள் அல்ல என்று இருக்கிறது. ஆனால் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அருமை தோழர் திரு. பூங்காவனம் அவர்கள் மிகப் பெரிய கேடிகள், ரௌடிகள் என்று கூடச் சொன்னார்கள். அப்படிப் பட்ட நிலையில் அவர் கள் கோர்ட்டிலே முன் ஜாமீன் கேட்கக் கூட வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களை உடனடியாகப் பிடிப்பதோடு மட்டும் அல்லாமல், இந்த வழக்குகளைப் பொறுத்தமட்டில்—சாதாரணத் தொழிலாளர்கள் ஊர்வலம் வந்தால் கூட 307 செக்ஷன் போடு கிறார்கள்—இவர்கள் மேல் கடுமையான வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இதிலே குறிப்பிடப்பட்டவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள் என்றாலும் அவர்களைக் கண்டுபிடித்து உள்ள படியே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார் கள். வழக்குகள் நடக்கிறபோது அவர்கள் எப்படிப் பட்டவர்கள்? உள்ளபடியே பரம்பரையாக குற்றம் செய்தவர்களா, கேடிகளா என்ற விவரம் எல்லாம் தெரியும். நான் முதலில் கூறியதைப் போல இந்த வழக்கினை முறைப்படி கவனித்து குற்றவாளிகள் கைது செய்யப்படவும், தண்டிக்கப்படவும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு, அதில் அரசு ஈடுபடும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS